இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 07-04-2025

# இந்தியாவில் முதலிடமான தமிழ்நாடு

**இந்தியாவிலேயே தமிழ்நாட்டை உச்சத்துக்கு கொண்டு போய் நிறுத்தி விட்டார் திராவிட நாயகன் - மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இது மகத்தான சாதனையாகும். யாராலும் செய்ய முடியாத சாதனை ஆகும். இந்தச் சாதனை சாதாரணமானது அல்ல.**

இந்தியாவின் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் தமிழ்நாடு புதிய உச்சத்தை அடைந்துவிட்டதாகச் சொல்வது ஒன்றிய அரசின் திட்ட அமலாக்கத்துறை ஆகும். 9.69 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே மிக அதிக விகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது தமிழ்நாடு.

**இந்தியாவின் பிறமாநிலங்களை விட இது அதிகம் என்பது ஒன்று. தமிழ்நாட்டின் வளர்ச்சி எவ்வளவு இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டதை விட இது மிக அதிகம் என்பது இரண்டாவது.**

பத்தாண்டு காலத்தில் இத்தகைய உச்சத்தை தமிழ்நாடு என்றும் எட்டியதே இல்லை. 8.57 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டை தொடர்ச்சியாக 7 என்ற எண்ணிக்கைக்குப் பின் தங்க வைத்தவர் பழனிசாமி. கோவிட் தொற்றை அவர் காரணமாகச் சொன்னாலும், அவரது கையாலாகாத்தனம் தான் இதற்கு முழுமுதற் காரணம்.

அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியை அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் -

8.13 விழுக்காடு - 8.23 விழுக்காடு என படிப்படியாக உயர்த்தி - இன்றைய தினம் 9.69 விழுக்காடாக உயர்த்தி தமிழ்நாட்டை இந்தியாவில் அனைத்து மாநிலங்களையும் விஞ்சிய வளர்ச்சியாக உயர்த்திக் காட்டி விட்டார்கள்.

தமிழ்நாடு அரசு முதன்முதலாக மார்ச் 2025 இரண்டாம் வாரத்தில் வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் முன்கணிப்பு செய்யப்பட்ட வளர்ச்சி வீதத்துடன், ஒன்றிய அமைச்சகம் வெளியிட்ட உண்மை வளர்ச்சி வீதம் ஒத்துப்போவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்தப் பொருளாதார ஆய்வு 8 விழுக்காட்டுக்கும் மேல் வளர்ச்சி இருக்கும் எனக் கணித்திருந்தது.

**சென்னைப் பொருளியியல் நிறுவனத்தின் (Madras School of Economics) மூத்த பொருளாதார வல்லுநர்கள் முனைவர் சி.ரங்கராஜன் மற்றும் முனைவர் கே.ஆர்.சண்முகம் ஆகியோர் ஜூலை 2024 இல் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி வீதம் 9.3 விழுக்காடு ஆக இருக்கும் எனக் கணித்திருந்தனர். இறுதியில், மேற்குறிப்பிட்ட இரண்டு மதிப்பீடுகளையும் தாண்டி அதிக வளர்ச்சியை தமிழ்நாடு பெற்றுள்ளது.**

ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் இணைய தளத்தில் குஜராத், பீஹார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 2024-25 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதம் குறித்த தரவுகளைப் பதிவேற்றம் செய்யவே இல்லை. கொரோனாவில் எத்தனை பேருக்கு ஊசி போட்டோம், எத்தனை பேர் பாதிக்கப்பட்டார்கள் என்ற தகவல்களையே பதிவேற்றம் செய்யாத மாநிலம் உத்தரப்பிரதேசம் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் இணையத் தளத்தில் வெளியாகி உள்ள தரவுகள் என்ன சொல்கிறது என்றால்?

★ **2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 9.69 விழுக்காடு உண்மை வளர்ச்சி வீதத்துடன் (Real Economic Growth Rate) இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.**

★ **நிலையான விலை மதிப்பின்படி 2023-24ஆம் ஆண்டில் ரூ.15,71,368 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP), 2024-25 ஆம் ஆண்டில் ரூ.17,23,698 கோடியாக உயர்ந்துள்ளது.**

★ **பணவீக்கத்தை கருத்தில் கொள்ளாமல் இதனைக் கணித்தால் 14.02 விழுக்காடு ஆகும். இதற்கு பெயரளவு வளர்ச்சி வீதம் (Nominal Growth Rate) என்று பெயர்.**

இந்திய நாட்டின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) தமிழ்நாடு 9.21 விழுக்காடு அளவுக்கு பங்களித்துள்ளது. அதாவது இந்திய நாட்டின் வளர்ச்சியில் நூறில் பத்து விழுக்காடு பங்கை தமிழ்நாடு செலுத்தி வருகிறது. இதுதான் தமிழ்நாட்டு வளர்ச்சியின் அடையாளங்கள் ஆகும்.

**எத்தகைய 'கஷ்ட' காலத்தில் இந்த சாதனைகள் எட்டப்பட்டுள்ளது என்பது தான் மிக முக்கியம் ஆகும். தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாத வயிற்றெரிச்சல் பேர்வழிகளை ஒதுக்கித் தள்ளுவோம். ஆனால் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒவ்வொரு இடத்திலும் தடுக்கக் கூடியதாக தடைச்சுவர் எழுப்பக் கூடியதாக இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு இருக்கிறது.**

செயற்கையான நிதி நெருக்கடியை பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு கொடுத்து வருகிறது. அதிகமான வரி தரும் தமிழ்நாட்டுக்கு 'பொரி' அளவுக்கு கூட நிதி தருவது இல்லை.

**"நாட்டின் சமச்சீரான வளர்ச்சியைஎதிர்நோக்கும் வகையில் வளர்ச்சி குன்றியபகுதிகளுக்கு தேவையான நிதியை வழங்குவதுஅவசியம் என்றாலும் அதே வேளையில், பல்வேறுவகையிலும் சிறப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களை அளிப்பதன் மூலமாகவே அவற்றின் வளர்ச்சியைத் தக்கவைப்பதுடன் அந்த மாநிலங்களின் வளர்ச்சிப்பாதைக்கும் வழிவகுக்க முடியும், என்பதையும் நிதிக்குழு கவனத்தில்கொள்ள வேண்டும். சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதியைக் குறைத்து வளர்ச்சியை எதிர்நோக்கும் பகுதிகளுக்கு நிதி ஆதாரங்களை மடைமாற்றுவதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவது மட்டுமின்றி, வளர்ச்சி குன்றிய மாநிலங்களுக்கு இறுதியாக கிடைக்கும் வரிப்பகிர்வும் குறைந்துவிடும் என்பதே உண்மை"** என்று நிதிக்குழுவிடம் மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார்கள். அந்த அளவுக்கு நம்மை நிதி நெருக்கடியில் தள்ளிவிட்டுள்ளது ஒன்றிய அரசு. இதெல்லாம் பா.ஜ.க.வுக்கு புரியாதவை ஆகும்.

**நிர்மலா சீதாராமன் என்று ஒருவர் நிதி அமைச்சராக இருக்கிறார். அவருக்கும் நிதிக்கும் தொடர்பு இல்லை. 'தமிழ்நாடு' என்ற பெயரே இல்லாமல் ஒன்றிய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார். 'அ.தி.மு.க.வை கைப்பற்றும் முயற்சிகளில்' அவர் இறங்கி இருக்கிறார். அவரிடம் இருந்து தமிழ்நாட்டுக்கு என்ன நன்மை கிடைக்கும்? இவரைப்போன்ற ஜென்மங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தான் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

9.69 விழுக்காடு வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, இதன் மூலமாக அமைதியான மாநிலம் தமிழ்நாடு என்பது உறுதியாகி இருக்கிறது. சட்டம் ஒழுங்கு சீராக இருக்கும் இடத்தில் தான் வளர்ச்சியானது இருக்கும். அந்தவகையில் பார்த்தால் அமைதியான மாநிலம் தமிழ்நாடு என்பதும் உறுதியாகி இருக்கிறது.

**அமைதியாய் தமிழ்நாட்டை உச்சத்துக்கு கொண்டு போயிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

●●

முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் அரசின் சீரிய நடவடிக்கைகளால்

# நாட்டிலேயே அதிகபட்சமாக 9.69% வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வலைதளத்தில் புகழாரம்!

சென்னை, ஏப்.7-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சீரிய நடவடிக்கைகளால் நாட்டிலேயே அதிகபட்சமாக 9.69% வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது.

ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழ்நாடு அடைந்துள்ள உயரத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் காட்டும் பாரபட்சத்துக்கு நடுவே, நம் முதலமைச்சர் அவர்கள் தீட்டிய திட்டங்களின் வெற்றிக்கு இந்தப் புள்ளி விவரமே சாட்சி.

தமிழ்நாடு ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கை நோக்கி நடைபோடுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

நம் முதலமைச்சர் அவர்களின் கரங்களை மேலும் வலுப்படுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சியை அடுத்தக்கட்டத்துக்கு எடுத்துச் செல்வோம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



பாம்பன் பாலம் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று (6.4.2025) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்திற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பொன்னாடை அணிவித்து வரவேற்றார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை திறப்பு விழாவில், நீலகிரி மாவட்ட பழங்குடியின மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எ.வ.வேலு, மு.பெ. சாமிநாதன், மா.சுப்பிரமணியன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன். நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா. சட்டமன்ற உறுப்பினர் ஆர்கணேஷ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப செந்தில்குமார், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. எம். கீதாஞ்சலி, இந்து குழுமத்தின் தலைவர் என். ராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில் ரூ.143.69 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள

# நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ சேவைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

**உதகை, ஏப். 7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.4.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ சேவைகளை துவக்கி வைத்து, அம்மருத்துவமனையின் அறுவை சிகிச்சை பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட வசதிகளை பார்வையிட்டார்.**

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் துவக்க விழாவின்போது, நீலகிரி மாவட்ட பழங்குடியின மக்களின் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

பின்னர், நீலகிரி மாவட்ட பழங்குடியின மக்கள் மற்றும் செவிலியர் சங்கத்தினர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர்.

**நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சிறப்பம்சங்கள்**

நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, 25 ஏக்கர் பரப்பளவில் 143.69 கோடி ரூபாய் செலவில் 700 படுக்கைகளுடன் 8 தனித்துவமான கட்டடங்களை ஒன்றாக இணைக்கும் மையக் கட்டடம், அவசர மருத்துவ பிரிவிற்கு (Emergency Block) தனிக் கட்டடம், வெளிநோயாளிகள் மருத்துவ சேவைகளுக்கான Block A மற்றும் B கட்டடங்கள், நான்கு மின் தூக்கிகள் ஆகியவை அமைக்கப்பட்டு, அதில் ECHO, Treadmill மற்றும் ஆய்வக சேவைகள் வழங்கப்படும்.

இப்புதிய கட்டமைப்பின், Block Cயில் 10 நவீன அறுவை சிகிச்சை அறைகளில் 4 ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் அறைகளும், மருத்துவ வாயு குழாய் அமைப்பு (Medical Gas Pipeline System) மற்றும் 10KL LMO டேங்க் மூலம்மைய ஆக்சிஜன் விநியோகிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதோடு, இவ்வளாகத்தில் இரண்டு மின் தூக்கிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**தீவிர சிகிச்சைப் பிரிவு Block Dயில்** தீவிர மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுகள் (ICU), 15 படுக்கைகள் கொண்ட ECRC - IIம் கட்டம் மற்றும் ஒரு மின் தூக்கியும் அமைக்கப்பட்டுள்ளது.

**உள்நோயாளி சேவைகள் பிரிவு (Blocks E, F, G & H)** உள்நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் வகையில் இந்த நான்கு பிரிவுகளும் அமைக்கப்பட்டு, இதில் நான்கு மின் தூக்கிகளும் அமைக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு மருத்துவப் பிரிவு (Block F)** - மலைவாழ் மக்களிடையே காணப்படும் இரத்தசோகை, சிக்கில்செல் அனீமியா மற்றும் தலசீமியா ஆகிய நிலைப்பாடுகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் BlockFல் சிறப்பு மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அவசர மருத்துவப் பிரிவு (Emergency Block)** இந்த மருத்துவமனையில், 20 படுக்கைகளுடன் 24 மணி நேரமும் விபத்து மற்றும் அவசர மருத்துவ சேவைகளான TAEI (Tamil Nadu Accident & Emergency Care Initiative), PREM (Paediatric Resuscitation & Emergency Management) ஆகியவை வழங்கப்படுகின்றன.

இப்புதிய மருத்துவமனை வளாகத்தில் அவசர மற்றும் திட்டமிட்ட அறுவை சிகிச்சைகளுக்குத் துணையாக அனைத்து வசதிகளும் கொண்ட இரத்த வங்கி, நோயாளிகளுக்கு சத்துள்ள உணவு வழங்குவதற்காக தனியொரு சமையலறை, அதிநவீன வசதிகளுடன் தானியங்கி சலவை இயந்திரம், உலர்த்தும் இயந்திரம் மற்றும் இஸ்திரி இயந்திரங்கள், தனியான பிரேதக் கூடம் (Mortuary Block) ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவக் கழிவுகளை திறம்படச் சேகரித்து, உடனடி செயலாக்கம் செய்து, பாதுகாப்பான முறையில் அகற்றும் பணிகளை உறுதி செய்யும் வகையில் சிறப்பான மருத்துவ கழிவு மேலாண்மை மையம் (Bio medical Waste Management Block) மற்றும் மருத்துவமனை வளாகத்திற்குள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage & Effluent Treatment Plant) ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனையில், மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கும் வகையில் 230 மருத்துவர்கள், 330 செவிலியர்கள், 5 முதன்மை மருந்தாளுநர்கள், 13 மருந்தாளுநர்கள், 13 ஆய்வக நுட்புநர்கள், 13 கதிர்வீச்சு நுட்புநர்கள் மற்றும் 5 மருத்துவ பதிவேடு நுட்புநர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் விவரங்கள்**

7.52 கோடி ரூபாய் மதிப்பிலான MRI 1.5 Tesla, 2.18 கோடி ரூபாய் மதிப்பிலான CT Scan 16 Slice, 56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 800 MA Digital XRay உள்ளிட்ட உயர்தர கதிரியக்க கருவிகள் மற்றும் 1.74 கோடி ரூபாய் மதிப்பிலான இதர மருத்துவ உபகரணங்கள் இம்மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைஅமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ. சங்குமணி, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. எம்.கீதாஞ்சலி, இந்து குழுமத்தின் தலைவர் என்.ராம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை அரசினர் விருந்தினர் மாளிகையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் முன்னிலையில் நீர்வளத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் திட்டங்கள் மற்றும் பணிகளின் முன்னேற்றம் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்து துறை அலுவலர்களுடான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, நீர்வளத் துறை மதுரை மண்டல தலைமை பொறியாளர் ரமேஷ், நீர்வளத் துறை வடிநில கோட்டம் கண்காணிப்பு பொறியாளர் சிவக்குமார், செயற்பொறியாளர்கள் வசந்தி, பழனிவேல் உள்பட அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.